LIBRARY
24 DEC 1964

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 20th July 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

மீன் பிடித் துறைமுகம்

*536 கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியன் : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலூகா, கிள்ளையை ஒரு சிறு மீன்பிடித் துறைமுகமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் உண்டா ?

THE HON. SRI G. BHUVARAHAN : No.

அரிசனங்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம்

*551 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்ட அரிசன நலக்குழு அரிசன வீடு கட்டும் திட்டத்தில் தற்போதுள்ள ரூ. 1,000-த்துக்குப் பதிலாக ரூ. 2,000-ஆக உயர்த்தித் தரவேண்டுமென சிபாரிசு செய்துள்ளதா ?

(இ) ஆமெனில், அந்த சிபாரிசைச் சர்க்கார் ஏற்றுக் கொண்டதா ?

THE HON. SRI P. KAKKAN : (i) Yes. The Committee has passed a resolution to that effect.

(ii) The Director of Harijan Welfare, Madras, is examining the proposal.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த அரிசன மக்களுக்கு வீடு கட்டுவது சம்பந்தமாக கோவை மாவட்டத்தில் பரிசீலனை செய்வதாகச் சொல்லுகிறுர்கள். மாநிலம் பூராவும் பரிசீலனை செய்து அரிஜன மக்களுக்குக் கட்டும் வீடுகள் இடிந்து விழாமல் கட்டித்தருவதற்கு வேண்டிய அளவில் சிபாரிசு செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஒரு ஜில்லாவிலிருந்து தீர்மானம் வந்திருக்கிறது. பரிசீலனை என்று எடுத்துக் கொள்ளும்போது, மாநிலம் பூராவும்தான் செய்வார்கள். ஏற்கனவே கூட்டுறவு சங்கம் மூலம் கடன் கொடுத்து வீடு கட்டித்தர ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனல் நாட்டுக்கு ஏற்பட்ட சோதனை காரணமாகப் பின்னுடிதான் அதுபற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று இருக்கிறது.